1974 ஏப்ரல் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆணைக்குழு இல்லையென்றால் எவ்வளவு இடங்கள் இருக்கிறதோ அவ்வளவு இடங்களுக்குத்தான் நாம் பி.டி. ஆசிரியர்களைத் தயாரிக்க முடியுமே தவிர, வேறு நிலை இருக்க முடியாது. பி.டி. ஆசிரியர்களாக 16 ஆயிரம் பேர்களைத் தயாரித்து விட்டு, 500, 1,000 இடங்களுக்குத்தான் ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள் என்கிறபோது தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எவ்வளவு இடங்கள் காலி இருக்கிறதோ, அப்படிக் காலி ஏற்படுகிற அளவிற்கு இடங்களை ஒதுக்குகிற நிலை ஏற்பட்டால், இந்த ஆணைக்குழு அவசியமில்லை, இங்கேயே தேர்ந்தெடுத்துவிட்டோம், மறுபடி தேர்ந்தெடுக்கவேண்டிய அவசியமில்லை என்ற நிலை ஏற்படும். இது கொள்கைப் பிரச்சினையாக இருப்பதன் காரணமாக வேறு சொல்ல முடியாது. பி.டி. படித்தவர்கள் 6 ஆயிரம் பேர்கள் இருக்கக் கூடும். நமக்குத் தேவைப்படுபவர்கள் 600 பேர்கள் அல்லது 700 பேர்கள் இருக்கக்கூடும். இப்படி 600 பேர்களைத் தேர்ந்தெடுக்கும்போது இப்படிப்பட்ட ஆணைக்குழுவின் பணிகள் தேவைப்படுகின்றன.

Part-time Lecturers

* 324 Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that the pay of the part-time Lecturers in Law, in the Law College, Madras, and that of the part-time Lecturers in Mercantile Law in the Arts Colleges in the State, are different; and

(*b*) if so, whether the Government will consider revising the consolidated pay of the latter with that of the former?

பகுதி நேர விரிவுரையாளர்கள்

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை, சட்டக் கல்லூரியில் சட்டம் (Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும், இம்மாநிலத்திலுள்ள கலைக் கல்லூரிகளில் வணிகச் சட்டம் (Mercantile Law) பற்றி போதிக்கும் பகுதி நேர விரிவுரையாளர்களின் சம்பளமும் வெவ்வேறாக உள்ளன என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கலைக்கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது மொத்த சம்பளத்தை, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களது சம்பளத்துக்கு இணையாக திருத்தியமைப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1960-ம் ஆண்டுக்கு முன்னால் கலைக் கல்லூரியில் பணியாற்றும் விரிவுரையாளர்களுக்கும், பகுதி நேர விரிவுரையாளர்களுக்கும் 150 ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டது. அதன் பின்னர் 1—6—1960-க்குப் பின்னால் அவர்கள் ஊதியம் உயர்த்தப்பட்டது. பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு 225 ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆனால் 1970-ம் ஆண்டு ஏற்பட்ட ஊதிய மாற்றத்தில் அவர்கள் ஊதியமானது ரூ. 400–15–475–20–575–25–650 என்று மாற்றியமைக்கப்பட்டது. ஆனால் இவர்களுடைய ஊதியம் அதே 225 ரூபாயில் நின்று விட்டது. இதை மாற்றியமைப்பது பற்றி அரசு பரிசிலனை செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சட்டக் கல்லூரியிலே பகுதி நேர விரிவுரையாளர்களை நியமிக்கின்றபோது சில பல விதி முறைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட விதி முறைகள் கலைக் கல்லூரியில் மெர்கெண்டைல் லா பயிற்சி துறையைப் பொறுத்து வலியுறுத்தப்படவில்லை. ஆனால் சட்டக் கல்லூரியைப் பொறுத்தவரையிலும் விதி முறைகள் பல வகுக்கப்பட்டிருக்கின்றன.

(1) (*a*) A degree of M.L. of the University of Madras and experience at the Bar for a period of not less than three years; or

(*b*) A first class degree of B.L. of the Madras University and a degree of B.A., or B.Sc. or B.Com. of a University in this State and experience at the Bar for a period of not less than five years; or

(*c*) (i) A second class degree of B.L. of the Madras University;

(ii) A degree of B.A. or B.Sc. with second class in two parts or B.Com. of a University in this State with second class or a degree of M.A., M.Sc., or M.Com. of a University in this State or a degree of B.Sc. or M.Com. of a University in this State obtained under the Old Regulation; and

(iii) Experience at the Bar for a period of not less than five years.

Preference shall be given to those who have secured in addition, high academic distinctions.

என்று இப்படிப்பட்ட விதி முறைகள் வைத்து சட்டக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆகவேதான் இந்த ஊதிய விகிதம் தனியாகத் தரப்படுகிறது. இப்படிப்பட்ட விதிகள் கலைக் கல்லூரியில் நியமிக்கப்படுகிறவர்களுக்கு ஏற்படுத்தாததன் காரணமாக இந்த ஊதியத்தில் வேறுபாடு இருக்கிறது. ஆகவே இதிலே இரண்டாவது ஊதியக் குழு பார்த்து நிர்ணயித்திருப்பதன் காரணமாக மாற்றம் செய்யவேண்டிய அவசியமில்லை என்று இந்தத் துறை கருதுகிறது.

திரு. கே. எஸ். கணபதி: தலைவரவர்களே, இந்தக் கலைக் கல்லூரிகளில் பணியாற்றும் பகுதி நேர விரிவுரையாளர்களாக இருப்பவர்கள் 'பிராக்டிசிங் லாயர்' ஆக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. அங்கு பணியாற்றும் விரிவுரையாளர்களின் சம்பளம் 'மீனியல்ஸ்' சம்பளத்தைவிட குறைவாக, 225 ரூபாய் என்று இருப்பதால் சிறந்த வழக்குறைஞர்கள் இந்தப் பணியை ஏற்றுக்கொள்ளுவதில்லை என்பதை மனதில் கொண்டு அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அவர்கள் வேண்டுமானால் தனியாக விண்ணப்பித்து, அவர்களுடைய ஊதியத்தை உயர்த்த வேண்டுமென்று கோரலாம். அவர்கள் தனியாக விண்ணப்பித்தால், அதுபற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, சட்டக் கல்லூரி பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு அதிகமான சம்பளத்தைக் கொடுப்பதாக அரசு உத்தரவிட்டு, மீண்டும் அந்த உத்தரவை வாபஸ் பெற்று, குறைந்த சம்பளத்தைக் கொடுத்ததாகவும், அவர்கள் அதிகமாக வாங்கிய சம்பளத்தைத் திரும்பக் கட்ட வேண்டுமென்று உத்தரவு பிறப்பித்ததும் எப்படி நிகழ்ந்ததென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால், அதனுடைய விவரக் குறிப்புகள் தரப்படும். அதில் என்ன நிலை ஏற்பட்டிருக்கிறதென்று சொல்ல முடியும்.

Remuneration to Teachers

*327 *Q.*—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the remuneration of the teachers appointed in various coaching centres to prepare students of Scheduled Castes and Scheduled Tribes for the Tamil Nadu Public Service Commission Examination for Group IV Service examination has not been paid so far; and